தமிழ்நாடு அரசு

# சிறுபான்மையினர் நல இயக்ககம்

முதல் தளம், கலச மஹால், சேப்பாக்கம், சென்னை – 5

## சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை (Pre-matric Scholarship) வழங்குதல் 2019-20

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மைய / மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர் புத்தமதத்தினர் பார்சி மற்றும் ஜெயின் மதத்தை சார்ந்த மாணவ/ மாணவியர்களுக்கு 2019-20 ஆம் ஆண்டிற்கு பள்ளிபடிப்பு கல்வி உதவித்தொகை (புதியது மற்றும் புதுப்பித்தல் ) பெற விண்ணப்பங்கள் மத்திய அரசின் தேசிய கல்வி உதவித்தொகை www.scholarships.gov.in என்ற இணைய தளத்தில் ஆன்லைன் (Online) மூலம் வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாட்டிற்கு 2019-20 ஆம் ஆண்டிற்கு மதவாரியான பள்ளி படிப்புக்கான (புதியது–Fresh) தோராய இலக்கீடு பின்வருமாறு:

| முஸ்லிம்கள் | கிறித்துவர்கள் | சீக்கியர்கள் | பௌத்தர்கள் | ஜைனர்கள் | பார்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 54259 | 56682 | 187 | 144 | 1145 | 2 | 112419 |

புதிய விண்ணப்பங்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை வரையறுக்கப்பட்ட / நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் மட்டுமே வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் (குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஏறுவரிசையில்) மத்திய அரசால் தேர்வு செய்யப்படுவர். இதில் 30% மாணவியருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு இலக்கு ஏதும் வரையறுக்கப்படவில்லை.

**தகுதி:**

| புதியது (Fresh) | புதுப்பித்தல். (Renewal ) |
|---|---|
| ➢ முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) **50%** மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்<br>➢ பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் **ஒரு இலட்சத்திற்கு மிகாமல்** இருத்தல் வேண்டும். | ➢ இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை (புதியது) பெற்றிருக்கும்பட்சத்தில் முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் **50 %** மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்<br>➢ பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் **ஒரு இலட்சத்திற்கு மிகாமல்** இருத்தல் வேண்டும். |

**இதர முக்கிய நிபந்தனைகள்:-**

- ➢ கல்வி உதவித்தொகை பெறுவதற்கு மாணவ / மாணவியர்கள் இணைய தளத்தின் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- ➢ பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் இதர துறைகள், நலவாரியங்கள் மூலம் கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்திருந்தாலும் ஏதேனும் ஒரு திட்டத்தில் மட்டுமே கல்வி உதவித்தொகை பெற முடியும்.
- ➢ குடும்பத்தில் அதிக பட்சம் இரு குழந்தைகளுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
- ➢ கல்வி நிலையத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளின்படி மாணவ மாணவியர்கள் தொடர்ச்சியாக பள்ளிக்கு வருகை புரிதல் வேண்டும்.
- ➢ தவறான ஆவணங்கள்/ தகவல்களின் அடிப்படையில் கல்வி உதவித்தொகை பெறுவதாக தெரியவந்தால், கல்வி உதவித்தொகை வழங்குவது முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, ஏற்கனவே வழங்கப்பட்ட உதவித்தொகை ஒரே தவணையில் மீள வசூலிக்கப்படும்.
- ➢ மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் கல்வி உதவித்தொகை வழங்குவது ஒத்தி வைக்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.

**இணைய தளத்தில் விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள் / விவரங்கள்**

i. மாணவ மாணவியரின் புகைப்படம்

ii. கல்வி நிலையத்தின் சரிபார்ப்பு படிவம் (Institution Verification Form) ((http://www.minorityaffairs.gov.in/ *என்ற இணைய தளத்தில் (SCHEMES/PERFORMANCE >Scholarship-Schemes >pre-matric-scholarship-scheme) உள்ள படிவத்தில் )*

i. கைபேசி எண் (Mobile Number) / மின்னஞ்சல் முகவரி (E-mail) (அதிக பட்சமாக இரு விண்ணப்பங்களுக்கு மட்டும்)

ii. மதிப்பெண் பட்டியல் (முந்தைய ஆண்டு தேர்வுகளில் குறைந்த பட்சம் 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்)

iii. ஆதார் எண் (ஏதேனும் வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்)

/. செயல்நிலையில் உள்ள மாணவ மாணவியர்/பெற்றோர்/பாதுகாவலர வங்கி கணக்கு (புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம்.)

v. பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமான சான்றிதழ் வருவாய்த்துறை மூலம் பெற்றிருத்தல் வேண்டும்

vi. மதம் / சாதிக்கான சான்றிதழ் அல்லது ரூ.10. நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள் (சுயசான்றொப்பமிடப்பட்டது) உறுதிமொழி படிவம்* (http://www.minorityaffairs.gov.in/ *என்ற இணைய தளத்தில் (SCHEMES/PERFORMANCE >Scholarship-Schemes >pre-matric-scholarship-scheme) உள்ள படிவத்தில் )*

vii. இருப்பிட / உறைவிட சான்றிதழ்

**கல்வி உதவித்தொகை**

| வகுப்பு | சேர்க்கை கட்டணம் | கற்பிப்பு கட்டணம் | பராமரிப்புப் படி |
|---|---|---|---|
| 1 முதல் 5 வரை | | | மாதம் ரூ. 100/- |
| 6 முதல் 10 வரை | மாதம் ரூ. 500/. மட்டும் (subject to actuals) | மாதம் ரூ. 350/. மட்டும் (subject to actuals) | மாதம் ரூ. 100/- (விடுதியில் தங்கி பயிலுபவர்களுக்கு மாதம் ரூ.600/.) |

**விண்ணப்பிக்கும் முறை**

- **புதியது:** புதிய மாணவ / மாணவியர் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் New Registeration என்பதை தெரிவு செய்து முதன்மை விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.
- மாணவ மாணவியர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் கைபேசி (Mobile) எண் இணைய தளத்தில் பதிவு செய்து சரிபார்க்கப்பட்ட பின்னர் மட்டுமே விண்ணப்பம் செய்ய அனுமதிக்கப்படும்.
- **புதுப்பித்தல்:** கல்வி பயிலும் பள்ளி மாறாமல் கடந்த ஆண்டில் சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை பெற்றுவரும் மாணவ மாணவியர்கள் மட்டுமே புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களாக கருதப்படுவர். புதுபித்தலுக்கு விண்ணப்பிக்கும்போது கடந்த ஆண்டு கல்வி உதவித்தொகை (புதியது)-க்கு பெறப்பட்ட விண்ணப்ப எண்ணை (Application ID) கொண்டே விண்ணப்பிக்கவேண்டும்.
- புதுப்பித்தலுக்கு மாணவ / மாணவியர் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் Login > Renewal என்பதை தெரிவு செய்து விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.
- புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்கள் ஏற்கனவே கல்வி பயிலும் பள்ளியின் பெயரை மாற்ற இயலாது.
- **இணைய தளத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் விடுபடாமல் பூர்த்தி செய்து விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து அதனுடன் மாணவ மாணவியரின் புகைப்படம், தேவையான அனைத்து ஆவணங்களின் நகல்களை இணைத்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கல்வி நிலையத்தில் விண்ணப்பத்தோடு சமர்பிக்க வேண்டும். ஆவண**

**நகல்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பாத மாணவ மாணவியர்களின் இணைய தள விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.**

| | |
|---|---|
| பள்ளி படிப்பு கல்வித் தொகைக்கு மாணவ மாணவியர்கள் புதியது மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பிக்க கடைசி நாள் | 15.10.2019 (செவ்வாய்) |

- இணைய தளத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை குறிப்பாக வங்கி கணக்கு விவரங்களை மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்யவேண்டும். **பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் எந்த நிலையிலும் மாற்றவோ திருத்தவோ இயலாது.**
- மாணவ மாணவியரின் ஆதாரர் எண்களின் விவரம் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கு இணைய தளத்தால் பகிரப்படமாட்டாது.
- மத்திய அரசால் அட்டவணை வகுப்பினர்/இதர பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென செயல்படுத்தப்படும் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தில் மட்டுமே பயன்பெற இயலும்.
- இத்திட்டம் தொடர்பாக மேலும் விவரங்களுக்கு தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**கல்வி நிலையங்களின் கவனத்திற்கு:**

i. அனைத்து பள்ளி / கல்வி நிலையங்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் பரிசீலனை செய்வதற்கு தனியே ஒருங்கிணைப்பு அலுவலர் (Institute Nodal Officer) நியமனம் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

ii. பள்ளி / கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர் தற்போதுள்ள (Existing) பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (National Scholarship Portal) உள்நுழைந்து (login) கல்வி நிலையத்தின் சரிபார்ப்பு படிவத்தினை (Institution Verification Form for Nodal officers) ஆன்லைனில் பூர்த்தி செய்து பள்ளி/கல்வி நிலைய ஒருங்கிணைப்பு அலுவலரின் அடையாள அட்டையினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் (upload) செய்தும் சமர்ப்பிக்க வேண்டும்.

iii. National Scholarship Portal(NSP) இணைய தளத்தில் புதிய பள்ளி / கல்வி நிலையங்களை இணைப்பதற்கு UDISE குறியீட்டு எண் அவசியமாகும். புதிய கல்வி நிலையங்கள் கீழ்காணும் ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி தங்களுக்கான பயனாளர் குறியீட்டு (Login / password) விவரங்களை பெற்றுகொள்ளலாம். (1) கல்வி நிலையத்தின் எழுத்துபூர்வமான கோரிக்கை கடிதம், (2) பள்ளி/கல்விநிலைய தலைவரின் பெயர், (3) மொபைல் எண், (4) கல்வி நிலையத்தின் மின்னஞ்சல் முகவரி (4) UDISE குறியீடு (5) மற்றும் அரசு அங்கீகாரத்திற்கான ஆவணம்

iv. தொடர்புடைய பள்ளி / கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர்(Institute Nodal officer) சரிபார்ப்பு படிவத்தினை இரண்டு நகல்கள் ஒளி நகல் எடுத்து அதில் தனது புகைப்படத்தை ஒட்டி அதில் பள்ளி / கல்வி நிலைய தலைவரின்(Head of Institution) கையொப்பம் பெற்று அதனை சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

v. பள்ளி / கல்வி நிலைய தலைவரால் கையொப்பமிடப்பட்ட சரிபார்ப்பு படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள், இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்ட விவரங்களும் ஒன்றாக உள்ளனவா என்பதை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் உறுதி செய்த பின்பு ஒப்புதல் அளிப்பர்.

vi. சரிபார்ப்பு படிவத்தின் ஒரு நகலை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தனது அலுவலகத்திலும், இரண்டாவது நகலை தொடர்புடைய கல்வி நிலையத்திலும் பாதுகாப்பாக பராமரிக்கப்படவேண்டும். இப்படிவங்களை சிறுபான்மையினர் நலத்துறை உயர் அலுவலர்கள் ஆய்வு செய்யவுள்ளனர். போலியான விண்ணப்பங்கள் குறித்த புகார் எழும்பட்சத்திலும் ஆய்வு செய்யப்படும்.

vii. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் பள்ளி /கல்வி நிலையத்தின் சரிபார்ப்பு படிவம் இணையத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், தொடர்புடைய பள்ளி /கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிற்கு SMS மூலம் அனுப்பப்படும் பயனாளர் குறியீடு மற்றும் புதிய கடவுச்சொல் (Login credentials) பயன்படுத்தி அடிப்படை விபரங்களை (வகுப்பு, கல்வி கட்டணம், மற்றும் இன்னபிற விவரங்கள்) பூர்த்தி செய்து கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் சரிபார்க்க துவங்கலாம்.

viii. தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் சரிபார்க்கப்பட்ட கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களின் ஒருங்கிணைந்த பட்டியலை (List of verified applications) கல்வி நிலைய தலைவரின் ஒப்புதல் பெற்று மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

ix. புதியதாக விண்ணப்பிக்கும் மாணவ மாணவிகள் இணைய தளத்தில் எளிதாக விண்ணப்பிக்கும் வகையில் அனைத்து கல்வி நிலையங்களும் தங்களுடைய UDISE/AISHE குறியீட்டு எண்ணை மாணவ மாணவியர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு http://www.minorityaffairs.gov.in/ மற்றும் http://scholarships.gov.in/ என்ற இணைய தள முகவரியினை அணுகவும்.

ஆணையர்,
சிறுபான்மையினர் நலத்துறை

---